(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 50 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, நவெம்பர் 26, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0028 / ’08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 2 ஆம் திகதி முதல் இற்றைவரை பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், உலை எண்ணெய், விமான எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்ட திகதிகளையும்,

(ii) பெற்றோலுக்கான சேர் பெறுமதி வரி நூற்றுவீதத்தையும்,

(iii) லீற்றர் ஒன்றுக்கு மேற்குறிப்பிட்ட பெறுமதியையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திக்குமான 2006 ஆம் ஆண்டுக்கான மொத்த வரிகளையும்,

(ii) இவ்வருமானம் பயன்படுத்தப்பட்ட நோக்கத்தையும்,

(iii) எல்லா வரிகளும் நீக்கப்படுமாயின் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், உலை எண்ணெய், விமான எரிபொருள் ஆகியவற்றின் விலை என்னவாக இருக்கும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) வரிகளின் அதிகரிப்பு, வீதிகளை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டது என்பதையும்,

(ii) வரிகள் விதிக்கப்பட்டதன் பின்னர் வீதிகள் மோசமடைந்துள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறெனின், அத்தகைய வரிகளின் நோக்கம் என்ன?

(உ) இன்றேல், ஏன்?

0085 / ’08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரையில்,—

(i) சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட மொத்த புதிய நாணயம் எவ்வளவு என்பதை மாதாந்த அடிப்படையிலும்,

(ii) சந்தையிலிருந்து கைப்பற்றப்பட்ட போலி அல்லது கள்ள நாணயங்களின் தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) நாணயத்தாள்களை அச்சிடுவதற்கான செலவு எவ்வளவு என்பதையும்,

(iv) பணத்தை அச்சிடுவதற்கான செலவு எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) எவ்வகையான பொருளாதார (உதாரணம் : சொத்துக்கள் + அடுத்த வருடத்திற்கான வளர்ச்சி) அடிப்படையின் கீழ் பணம் சந்தைக்கு விடுவிக்கப்பட்டது என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0087/ ' 08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி. திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான செயற்பாடுகள் என்ன என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மத்திய வங்கியானது அரசியல் தலையீடு அற்ற நிறுவனமா என்பதையும்,

(ii) நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை இன்றுள்ளவாறு தனித்தனியாகவும்,

(iii) முதல் மற்றும் வட்டி ஆகிய ஆக்கக்கூறுகளை தனித்தனியாகவும் மற்றும் 1948, 1955, 1956, 1977, 2001, 2004, 2007 ஆகிய ஆண்டுகளில் மொத்தமாக செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கத்தின் நிலுவைகளை செலுத்துவதற்கென மத்திய வங்கியினால் அச்சிடப்பட்டு சந்தைக்கு விடப்பட்ட பணத்தொகையின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) 1995 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஒவ்வொரு வருடமும் செத்தெம்பர் 30 ஆம் திகதியிலுள்ளவாறு மக்கள் வங்கிக்கும், இலங்கை வங்கிக்கும் திறைசேரியின் கணக்கிலுள்ள நிலுவை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0242 / ' 08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0263 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— விளையாட்டுத்துறை, பொதுப் பொழுது போக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விளையாட்டுத்துறை (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தி யோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0264 / '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவுத்துறை (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0303 / '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திஸ்ஸ அத்தநாயக்கவினால் 1999 ஆம் ஆண்டில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அப்போதைய நெசவுத் தொழில் அமைச்சரால் வழங்கப்பட்ட பதிலில், காலி மற்றும் அநுராதபுரத்தைத் தவிர ஏனைய பத்து மின்தறி நெசவுத்தொழில் முயற்சிகளின் ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரித்துக்கிடையாதென குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2003 ஆம் ஆண்டு வரை ஓய்வூதிய உரித்துக் கிடையாதெனக் கருதப்பட்ட மின்தறி நெசவுத்தொழில் ஊழியர்கள் 800 பேருக்கு 2003.01.01 ஆம் திகதி யிலிருந்து ஓய்வூதிய உரித்துக்கிடைத்ததென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) சட்டமா அதிபரின் இலக்கம் ஈ 423/2002 மற்றும் 2003.02.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பத்து வருட சேவைக்காலத்தை கொண்டிராத மின்தறி நெசவுத்தொழில் ஊழியர்கள் எவரையும் ஓய்வுபெறச் செய்ய வேண்டாமென நெசவுத்தொழில் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததா,

(ii) எஞ்சியுள்ள ஊழியர்களை ஓய்வுபெறச் செய்வதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் ஆ/iv/2/1/66 ஆம் இலக்க, 2003.03.10 ஆம் திகதிய அறிவுரைகள் மற்றும் அதே இலக்கத்தைக் கொண்ட 2003.05.19 ஆம் திகதிய கடிதத்தைப் பயன்படுத்தாதிருப்பதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) காலி மற்றும் அநுராதபுர நெசவுத்தொழில் முயற்சிகளில் பத்துவருட சேவைக் காலத்தைக் கொண்டிராதவர்களை ஓய்வுபெறச் செய்வதைப் போன்று லேவெல்ல, பொல்கொல்ல உட்பட ஏனைய பத்து மின்தறி நெசவுத்தொழில் துறைகளின் ஊழியர்களை ஓய்வுபெறச் செய்யாததன் மூலம் மீறப்பட்டுள்ள , உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0407 / ’08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0472 / ’08

9.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமையாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்குகளின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0525 / '08

10.

கௌரவ அநுர திஸ்ஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிரீமா நிறுவனத்திற்கு கோதுமை மாவின் பொருட்டு அரசாங்கத்தினால் மானியம் வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், ஒரு கிலோ மாவிற்கான மானியத்தொகை எவ்வளவு,

(iii) மேற்படி மானியத்தை வழங்குவதற்கு எப்போதிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது,

(iv) இது எப்போது நிறுத்தப்பட்டது,

(v) மேற்படி காலத்தினுள் ஒவ்வொரு ஆண்டின் பொருட்டும் மானியமாக வழங்கப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிற்குமான மானியத் தொகைகள் பிரீமா கம்பனிக்கு வழங்கப்பட்ட திகதிகள் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0637 / '08

11.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி, நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளதும் கொத்தலாவல கொட்டல பத்தலகம, "இலக்கம் 02 பிரிவில்" 80 ஏக்கர் பிரதேசத்தை உள்ளடக்கியதும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமானதும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டதுமான காணியின் பரப்பளவு எவ்வளவு,

(ii) இதில் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரை பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் பரப்பளவு எவ்வளவு,

(iii) மேற்படி காணி பெறுநர்களின் பெயர், முகவரி மற்றும் வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணி பெறுநர்கள் குறித்த காணிகளில் வசிக்கின்றார்களா அல்லது அனுபவிப்பு உரிமையைக் கொண்டுள்ளார்களா,

(ii) தமக்குக் கிடைத்த காணியை இன்னொருவருக்கு ஒப்படைத்துள்ள அல்லது சட்டரீதியற்ற விதத்தில் விற்பனை செய்துள்ளவர்களின் பெயர், முகவரி யாது,

(iii) அவ்வாறெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரசாங்கத்திலிருந்து இலவசமாகக் காணிகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவற்றை விற்பனை செய்துவிட்டு மீண்டும் அரச காணிகளை அத்துமீறிக் கைப்பற்றுதல் மேற்படி பிரதேசங்களில் தாராளமாக நடைபெறுவதன் காரணத்தினால், அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாக்கும் பொருட்டு எல்லைகளை அடையாளமிட்டு தேவையான நடவடிக்கைகள் எவ்வளவு காலத்தினுள் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0650/ ' 08

12.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) விவசாயிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் என்ற வகையில் நடத்தப்பட்ட "தேசிய கமக்காரர்கள் சந்தை" மற்றும் கண்காட்சி ஆகியவற்றின் தன்மை யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அத்தேசிய கமக்காரர்கள் சந்தையும் கண்காட்சியும் நடத்தப்பட்ட இடம் யாது,

(ii) ஒவ்வொரு கமக்காரர்கள் சந்தையையும் கண்காட்சியையும் நடத்துவதற்குச் செலவான பணம் எவ்வளவு,

(iii) ஒவ்வொரு கமக்காரர்கள் சந்தை மற்றும் கண்காட்சி ஆகியவற்றின் மூலம் கிடைத்த இலாபம் அல்லது அடைந்த நட்டம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட சந்தை மற்றும் கண்காட்சி ஆகியவற்றோடு இணைந்ததாக "கொவிஜன வாசனா" என்ற பெயரில் லொத்தர் சீட்டொன்று அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதா,

(ii) அந்த லொத்தர் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு,

(iii) அந்த லொத்தர் மூலம் வழங்கப்படுகின்ற பரிசுகளின் பெறுமதி வெற்றி பெற்ற இடங்களின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவு,

(iv) இப்பரிசுப் பொருட்கள் அல்லது பரிசுப் பணம் சம்பந்தப்பட்ட வெற்றியாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளதா,

(v) இன்றேல், அப்பரிசுப் பொருட்களை அல்லது பரிசுப் பணத்தை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0667/ '08

13.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மெல்லவாகார, மாதம்பே முகவரியைக் கொண்ட திரு. ஆர். பி. விஜேரத்ன கடற்படையில் எவ்வளவு காலம் சேவையாற்றினார்,

(ii) இவரைச் சேவையிலிருந்து நீக்கியமைக்கான காரணம் யாது,

(iii) இவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்னர் அல்லது பின்னர், இவருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் பட்டதா,

(iv) ஆமெனில், அது எப்போது மற்றும் அவ்விசாரணையை நடாத்திய உத்தியோகத்தர்கள் யார்,

(v) ஒழுக்காற்று விசாரணையின் போது இவருக்கு எதிராக இருந்த விடயங்கள் அல்லது குற்றச்சாட்டுகள் யாவை,

(vi) மேற்படி விசாரணையின் பின்னர், அதனுடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை இவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப் பட்டதா,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திரு. ஆர். பி. விஜேரத்னவை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0703/'08

14.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெருமளவில் பசுக்கள் இறைச்சிக்காக கொல்லப்படுவதால் உள்நாட்டு பால் உற்பத்தி வீழ்ச்சியடையும் அபாயமும் பசுக்கள் அழிவடையும் அபாயமும் தோன்றியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) 1990 ஆம் தசாப்தத்தின் முன்னரைப் பகுதியில் ரஜரட்ட மற்றும் வடமேல் உலர் வலயங்களில் ஒரு மந்தையில் இருநூறு முதல் முந்நூறு பசுக்கள்வரை இருந்ததுடன் அவை இறைச்சிக்காக விற்கப்பட்டதன் விளைவாக பால் உற்பத்தியின் அளவு குறைவடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) பசுக்கள் கொல்லப்படுவதை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்,

(iii) கால்நடைத்துறை அழிவடைய வழிசமைத்துள்ள இப் பேரழிவினை தடுப்பதற்கு தேசிய மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iv) பாராளுமன்றக் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று பசுக்கள் கொல்லப்படுவதை சட்டரீதியாக தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0709/ '08

15.

கௌரவ பேமசிறி மானகே,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கோட்டேகொட அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள காணி தொடர்பில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது மூன்று நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அஞ்சல் அலுவலகத்தின் காணியைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்த மதில் 2008.06.29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடைக்கப்பட்டு காணியில் ஒரு பகுதி எவரேனும் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதா,

(ii) அந்நபரின் பெயர், முகவரி மற்றும் பதவி யாது,

(iii) அந்நபருக்கு முறையான ஒரு அனுமதி வழங்கப்படாதிருப்பின் அஞ்சல் அலுவலகச் சொத்துக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பில் குறித்த திணைக்களத்தால் பொலீசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா,

(iv) ஆமெனில், அது எந்தப் பொலீசுக்கு,

(v) குறித்த முறைப்பாடு யாரால் செய்யப்பட்டது,

(vi) முறைப்பாடு செய்யப்பட்ட திகதி, நேரம் மற்றும் முறைப்பாட்டு இலக்கம் யாது,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பொதுச் சொத்துக்குச் சேதம் விளைவித்து, கைப்பற்றியுள்ளமை தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா,

(ii) ஆமெனில், அது எக் காலகட்டத்தினுள்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட பதினைந்தாம் நாள்) - குழு ஆய்நிலையில் (பரிசீலனை நவெம்பர் 25 ஆம் திகதி).

*2.

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 306, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து ஐம்பது மில்லியன் (1,050,000,000ரூபா) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப் படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 306 | — | இலங்கை புகையிரதத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 186,000,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | 864,000,000 |
| | | மொத்தம் | 1,050,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, நவெம்பர் மாதம் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 8 வரையுள்ள மதிப்பீடு களின் மொத்தம் 27,039,980,332 ரூபா .

*3.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 06 ஆம் திகதிய 1552/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில்

மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515—12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் 58,915 ரூபா சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து 58,915 ரூபா மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,—

1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும்

படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,

நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,

2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*14.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*15.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— “(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*16.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*17.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*22.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*26.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*27.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*28.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*29.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*30.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*31.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

தாலியவக்க ஸ்ரீ ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

எக்சத் ஜன இசுறு பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

வண. மூனமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்கள்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) எனும் சட்டமூலத்திற்கு குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிகளுக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.